அப்பட்டியலில், மாணாக்கரது பெயர், பிறந்த தேதி, பெற்றோர் / பாதுகாவலர் பெயர், புகைப்படம், மொழிப்பாடம் மற்றும் பாடத்தொகுப்பு எண் ஆகிய விவரங்களில் திருத்தங்கள் இருப்பின், 19.03.2022 முதல் 23.03.2022 வரையிலான நாட்களில் பள்ளித் தலைமையாசிரியர்கள் அத்திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும்.

2. பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வெழுதிய பின்னர், அரசிதழில் (Gazette) பதிவு செய்த பெயர் மாற்றம் செய்த மாணக்கர்களுக்கு மட்டும்,பத்தாம் வகுப்பு சான்றிதழில் உள்ளவாறு இல்லாமல் அரசிதழில் உள்ளவாறு பெயரை மாற்றம் செய்தகொள்ள அனுமதி வழங்கப்படுகிறது.
3. 2021 – 2022 ஆம் கல்வி ஆண்டிற்கான மேல்நிலை முதலாம் ஆண்டு பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் பெயர்ப்பட்டியலில் (Nominal Roll) எவரேனும் சேர்க்கை விடுபட்டிருப்பின் பெயர்ப்பட்டியலில் சேர்ப்பது குறித்து பின்னர் அறிவிக்கப்படும்.
4. மேலும், மேல்நிலை முதலாம் ஆண்டு மாணவர்களது பயிற்று மொழியில் (Medium of Instruction) திருத்தங்கள் இருப்பின் அவற்றினை உரிய கடிதம் மற்றும் இணைப்புகளுடன் 24.03.2022–க்குள் dgeh4sec@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி திருத்தங்களை மேற்கொள்ளுமாறு அனைத்து வகை மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கும் அறிவுறுத்தப்படுகிறது.

.க.(முனுசாமி)XXXXX
முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

17.03.2022

இணைப்பு– பார்வைக் கடித நகல்

பெறுநர் :

அனைத்து வகை தலைமை ஆசிரியர்கள் (மேல்நிலை)
வேலூர் மாவட்டம்.

நகல்–

1. அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர், வேலூர்,
   (தகவலுக்காக கனிவுடன் அனுப்பப்படுகிறது)
2. மாவட்ட கல்வி அலுவலர்
   வேலூர்.
   (தகவலுக்காகவும் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டும்)